யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 11 ஷஃபா 14 இதழ் 72

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-4-1986

## குண்டுவெடித்து வெள்ளவத்தை பொலிஸ் நிலையம்சேதம்; 9பேர்காயம்

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை நிகழ்ந்த குண்டு வெடிப்பினுல் ஐந்து பொலிஸார் உட்பட ஒன்பதுபேர் பலத்த காயமடைந்துள்ளார்கள். இவர்களில் இருபொலிஸார் உட்பட மூவரின் நிலைமை கவலைக்கிடமான நிலையிலுள்ளது.

இந்தச்சம்பவத்தில் உடனடியாக எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லையாயினும் பொலிஸ் நிலையக் கட்டிடத்தின் முன்பகுதி முற்ருகச்சேதமடைந்துள்ளது.

இக்குண்டு வெடிப்புச்சம்பவம் பற்றித் தெரியவந்ததாவது:

தனியார் பஸ்வண்டியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் கைப்பை ஒன்று அவ்வண்டியின் சாரதியால் கண்டெடுக்கப்பட்டது. அப்பையை சாரதி வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளார்.

பொலிஸ் நிலைய வாசலில் நின்ற பொலிஸ்காரர் ஒருவர் அப்பையை நோட்டமிட்ட பின்னர் அதனைக்கொண்டு வந்த சாரதியுடன் பொலிஸ் நிலையத்தினுள் அதனைக் கொண்டு சென்றுள்ளார்.

உள்ளே வேறொரு பொலிஸ்காரருடன் சேர்ந்து அப்பையைச் சோதனையிட்டபோது அதற்குள் உடைகள் சில காணப்படவே, அவற்றை வெளியே எடுத்தபோது அப்பையிலிருந்து குண்டொன்று வெடித்தது. இது குறித்து புலன்விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ய. கி)

● அநுராதபுரம் எரிபொருள் நிலையத்தில்

# புலோலி பவுஸரில் குண்டு:

# 9 பேர் கருகி மாண்டனர்

## மூவர் படுகாயம் நிலையத்திற்கு சேதம்

(அலுவலக நிருபர்)

**அநுராதபுரம் எரிபொருள் நிரப்பும் மத்திய நிலையத்துக் கருகாமையில் நின்ற பவுஸர் ஒன்றுக்குள் குண்டு வெடித்ததால் பல எரிபொருள் தாங்கிகளில் தீப்பிடித்ததுடன் அங்கு கடமையிலிருந்த 9 பேர் பலியானுர்கள்; மூவர் படுகாயமடைந்தனர்.**

நேற்று நண்பகல் இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

பருத்தித்துறைப் பகுதியில் உள்ள புலோலி ப. நோ. கூ. சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பும் பவுஸரிலிருந்தே குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியின் முக்கிய கேந்திர நிலையமாக இந்த எரிபொருள் நிரப்பும் நிலையம் விளங்குகிறது.

மேற்படி பவுஸருக்கு எரிபொருள் நிரப்புவதற்காக பவுஸரிலிருந்த மூடியைத்திறக்கும் பொழுது குண்டுவெடித்ததாகக் கூறப்படுகிறது.

குண்டு வெடித்த சத்தம் அநுராதபுரம் பகுதியைஅதிர்ச்சிக்குள்ளாக்கியதைத் தொடர்ந்து எங்கும் பதற்றநிலைதோன்றியது.

குண்டு வெடித்ததால் எரிபொருள் நிலையத்தில் தீப்பிடித்து அதன் ஒரு பகுதிஎரிந்தது மற்றும் பல எண்ணைத் தாங்கிகளிலும் தீப்பிடித்தது எங்கும் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

முப்படைகளையும் சேர்ந்தவர்களும் தீயை அணைப்பதில் தீவிர முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர்.

நிலையத்தின் உதவி மனேஜர் உட்பட ஊழியர்கள் பலர் தீயில் கருகி மாண்டனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து போக்குவரத்து சேவைகள் தடைப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம்வந்த சில வாகனங்கள் அநுராதபுரத்துக்கு அண்மையில தாளியபுரம் என்னுமிடத்தில்வைத்துத் தாக்கப்பட்டதாசச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

இககுண்டுவெடிப்பு சம்பந்தமாக விசாரணை நடாத்திய ஆயுதப் படையினர் மூவரைக் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ய-மா]

## ஜே. ஆர். கூற்றுக்கு சுப்பிரமணியசுவாமி ஏளனம்

[வாஷிங்டன்]

இலங்கைத் தமிழ் மக்கட் தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள கொள்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்காக நூறுசத வீதமான வெளிநாட்டு உதவிகளையும் தமது அரசு தியாகம் செய்யத் தயாராக இருக்மெனஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு கூறியிருப்பதை திரு. சுப்பிரமணிய சுவாமி ஏளனம் செய்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை நிறுத்துவதற்காக இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகளை குறைக்கும் முயற்சியில் குழுஒன்று மேற்கொண்டு வருவதாக

(5ம் பக்கம் பார்க்க)

## விஸ்வமடுவில் 2 இளைஞர் பலி; ஒருவர் கைது

[ஒட்டுசுட்டான்]

விஸ்வமடுப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடாத்திய ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது யோகிலன் [20 வயது], எஸ் ரவி [23 வயது] ஆகிய இருவர் கொல்லப்பட்டனர்; ஜயாவு 27 வயது) என்பவர் கைது செய்யப்பட்டார். சிலகடைகளும் கராஜ் ஒன்றும் குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டன

நேற்றுமுன்தினம் செவ்வாய்ககிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றது,

ஒட்டுசுட்டான்: முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகியபகுதிகளிலுள்ள மூன்று இராணுவ

[5ம் பக்கம் பார்க்க]

## இன்று சந்திரகிரகணம்

(யாழ்ப்பாணம்)

இன்றிரவு பூரண சந்திர கிரகணம் நிகழவுள்ளது இது இலங்கை இந்தியா, பர்மா, மலேசியா ஆகிய இடங்களில் பூரணமாகத் தெரியும் இங்கு சந்திரன் உதயமாகும்போது பூரண கிரகணம் ஆரம்பமாகி 7 52க்கு முடிவடையும்.

## புதுடில்லியில் கூட்டணி பேச்சுவார்த்தை

(லண்டன்)

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் வெளியுறவுக் கொள்கைஆலோசகர்களுடன் டில்லியில் பேச்சுவார்த்தைகளை தொடங்கியுள்ளனர். (வா)

போக்லாந்து யுத்த

## கொடிக் கப்பலை இந்தியா வாங்கியது

புதுடில்லி, ஏப். 23

பிரிட்டனிடமிருந்து இந்தியா விமானந்தாங்கிக்கப்பல் ஒன்றை வாங்கியுள்ளது

இக்கப்பல் சுமார் 29ஆயிரம் தொன்கள் எடை கொண்டதாகும். பிரிட்டனின் கடற்படையில் 'எச். எம். எஸ். ஹேர்ம்ஸ்' என்ற பெயரைத் தாங்கி இக்கப்பல் பணியாற்றி வந்தது.

1982ல் ஆண்டு பிரிட்டன் போலந்துதீர்வு தொடர்பாக ஆஜண்டீனுவுடன் நடத்திய யுத்தத்தில் இந்த ஹேர்ம்ஸ் என்ற விமானந்தாங்கிக் கப்பலே பிரிட்டிஷ் கடற்படையின் பிரதான 'கொடிக்கப்லாக விளங்கியது.

பிரிட்டிஷ் படைகளின் விமானங்களுடன் ஏனைய பல சாதனங்களையும் அந்த யுத்தத்தின் போது இக்கப்பல்தன்னகத்தே கொண்டிருந்தது. (கி)

## மீண்டும் உணவு முத்திரை

## 'ஆ' படிவத்தை உடன் நிரப்பிச் சமர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

உணவு முத்திரைக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளவர்கள் உடனடியாகத் தம் பகுதிக்கிராமசேவை அலுவலர்கள் மூலம் 'ஆ' படிவத்தை நிரப்பிச் சமர்ப்பிக்கவேண்டும் இல்லையெனில் உணவு முத்திரைகளைப் பெறும் வாய்ப்பினை இழப்பர்.

வறுமை நிவாரணத்திட்டத்தின் கீழ் உணவு முத்திரை வழங்குவதைத் திரும்பவும் உடனடியாக அமுல்படுத்தும்படி அரசு பணித்துள்ளது ஆகவே உணவு முத்திரைக்கு விண்ணப்பித்தவர்கள் 'ஆ' படிவத்தை நிரப்பிதங்கள் கிராம சேவை அலுவலரிடம் இம்மாதம் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும் தவறினுல் இத்திட்டத்தின் கீழ் உணவு முத்திரை பெறும் சந்தர்ப்பத்தை இவர்கள் இழக்க நேரிடும் என்று தெரிவிக்கப்படுகிறது

## 5 குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தாய் தற்கொலை

(மட்டக்களப்பு)

தனது ஐந்து குழந்தைகளுக்கும் நஞ்சூட்டித் தானும் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார் ஓர் இளந்தாய். கணவனுடன் ஏற்பட்ட தகராறே இதற்குக்காரணம்,

மட்டக்களப்பிலுள்ள புதுக்குடியிருப்பு என்னும் கிராமத்தில் இச்சோக சம்பவம் இடம்பெற்றது.

ஐந்து பிள்ளைகளில் கடைசியான 6 மாதக்குழந்தை உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது. மற்ற நான்கு குழந்தைகளும் இறந்துவிட்டன,

சீட்டுக்காசு கட்டுவதற்காக கணவன் வீரக்குட்டி முத்துலிங்கம் [வயது 33] சைக்கிள் கரியரை விற்றதால் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து தங்கமலர் [வயது 25) இப்பயங்கர நடவடிக்கையில் இறங்கியதாக மரணவிசாரணையில் தெரியவந்தது [மா]

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

கோப்பாய் வடக்கு இராச பாதைக்கு ¼ மைல் தூரத்தில் 3 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விரும்பியோர் கீழ்கண்ட விலாசத்துடன் தபால்மூலம் தொடர்பு கொள்ளவும். நா. இரத்தினம். சாந்தி றேடஸ், கோப்பாய் சந்தி, கோப்பாய். [C-1958]

வெளிநாடு செல்லும் என்ஜினியரின் குளிர்சாதனப் பெட்டி, அலுமாரி, கட்டில்கள், Vono Spring Beds, Dressing Table, எழுது மேசைகள், Show Case, சாப்பாட்டு மேசைகள், ஹோல் செற்றி, தேக்கு களபாடங்கள், pyrex Dinner Set, Cut glass, சில்வர் பாத்திரங்கள், கசற் றேடியோ, Iron, கம்பளங்கள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். [C-1953]

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் கஜேந்திரன் கணேசலிங்கம்

கணேசலிங்கம் ஞானமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கஜேந்திரன் தனது முதலாவது பிறந்த தினத்தை 24-4-86 இன்று கொக்குவிலிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா. அம்மா, பூட்டி, ஓமானிலுள்ள அம்மப்பா, இந்தியாவிலுள்ள அம்மம்மா, மாமன்மார், மைதிலி அன்ரா, இத்தாலியிலுள்ள மாமா, பிரான்ஸிலுள்ள மாமா, சித்தப்பா, சித்தி, கனடாவிலுள்ளசித்தப்பா, கொக்குவிலுள்ள அப்பம்மா, அத்தைமார், மாமா, மச்சான்மார், மச்சாள்மார், பொன்ஞவெளியிலுள்ள கொண்டக்டர் சின்ன அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், அன்ராமார், சண்முகநாதன் மாமா, ஜெயம் மாமா, லக்சஞ அக்கா ஆகியோர் இவரை பல்கலையும் கற்றுபல்லாண்டு காலம் வாழ்கவென உள்ளம்கனிந்து வாழ்த்துகிறார்கள். (C1957)

## விற்பனைக்கு

1 சோடி பன்றி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: N. ரவீந்திரன், C/o S. செல்லதுரை, விளாத்தியடி லேன், உரும்பராய், மருதனமட வீதி, உரும்பராய். [C-1935]

மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மையில் சியாமளா மில் ஒழுங்கையில் 20 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. திருமதி ஆறுமுகம், வீரசிங்கம் மகாவித்தியாலயம் முன்பாக, புத்தூர் சந்தி, மீசாலை. [C-1955]

## வகுப்புகள்

ரேடியோ அன் ரீவி, வெல்டிங், பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய வகுப்புகள் குறைந்த கட்டணத்துடன் 25-4-86, 26-4-86இல் ஆரம்பமாகின்றன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 1895)

பௌதீகவியல் (88) புதிய வகுப்பு, ஆசிரியர்: N. பத்மநாதன் B. Sc. (Hons) ''அளவீடுகள்'', சனி-ஞாயிறு 7-30 a. m. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், நாவலடி லேன், திருநெல்வேலி Note: மே 24 முதல் ஒளியியல். (C 1905)

108, Brown Road, Jaffna, A/L 88 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ். ஆரம்பம்: 25-04-86 வெள்ளி 4-30 P.M. அடுத்த பிரிவு ஆரம்பம்: 26-04-86 சனி 2-15 P.M. விபரங்கள் நேரில். [C-1954]

## கல்வி

ஆசிரியரின்றி நீங்கள் சுயமாகவே இலகுவில் ஆங்கிலம் பேச - Spoken English எழுத-வாசிக்க கற்றிடலாம். பட்டதாரி ஆசிரியர்களினுல் விரிவான இலக்கணத்துடன் ஆக்கப் பெற்ற பாடத்தொகுப்புகள் பல. மேலதிக விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் தொடர்பு: Trinity Publishers, 234/7, Maniapay Road, Jaffna. [C-1940]

## தேவை

புளியங்கூடல் சந்திக்கு அருகாமையில் உள்ள மஞ்சு கிரைண்டிங் மில்லிற்கு திறமான மில் டிறைவர் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய இடம் ராணி ஸ்ரோஸ், வங்களாவடிச் சந்தி, வேலணை. (C1946)

## சேவை

தட்டச்சு இயந்திரம் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு. Fudo Enter Prises, 39/17, மின்சார நிலைய வீதி, [3-ம் ஒழுங்கை] யாழ்ப்பாணம். [C-1961]

## மணப்பந்தல்

யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் 45 வயதுடைய இந்து (Bachelor) பெரும் குடிமகனுக்கு 35 வயதுக்கு மேற்பட்ட மணப்பெண் தேவை. சீதனம், வீடு வளவுடன், ரொக்கப்பணமும் எதிர்பார்க்கப்படுகிறது. ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். 7, Champion Lane, Kokuvil. [C 1944]

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப்பத்திரம்

ஆயிரத்தி ஐந்நூறு (1500) வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2/50 செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொண்ட பத்திரத்தில் பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்ற விலாசத்திற்கு கேள்விப் பத்திரங்களை 26-4-86ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பதாரர் ரூ. 750/- வைப்புப்பணம் செலுத்துதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

21-4-86.
ஊர்காவற்றுறை. (A610)

## நன்றி

அடியவர்களாகிய எமக்கு அளித்த உதவிகளுக்காக புனித யூதா ததேயுவுக்கு நாம்என்றும் நன்றியுடையோம்.

த. மாணிக்கவாசகரும் மனைவி பிள்ளைகளும். (C1732)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கதிரவேலு நன்னித்தம்பி

(ஓய்வு பெற்ற பிஸ்க்கால் உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 14-04-1914
மறைவு: 15-04-1984
திதி: 24-04-1986

அப்பா நீங்கள் மறைந்து ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்தை விட்டு என்றும் மறையாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துன்பப்படும்,

மனைவி, மக்கள்.
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

25, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். C 1943

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் மு. சி. கனகரத்தினம்

[இளைப்பாறிய ஆசிரியர்]

மண்நிறைவு:
21-03-1904

விண்நிறைவு:
25-03-1986

அப்பா! பாசமுடன் எம்மை பாராட்டி, சீராட்டி வளர்த்து ஆளாக்கி நல்வழி காட்டி, என்றும் எமக்கு உறுதுணையாக ஒளி வீசிய தீபமே, நீங்கள் இறையடி சேர்ந்தாலும் என்றும் உங்கள் வாழ்க்கை எமக்கு வழிகாட்டியாக இருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

அப்பா நோயுற்றிருந்த போது அவருக்கு தகக சிகிச்சை அளித்த ஆனைப்பந்தி தனியார் வைத்திய சாலை டாக்டர்களுக்கும், தாதிமார், மற்றும் சக ஊழியர்கட்கும், அவர் பிரிவின் போது பலவழிகளாலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள்.

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர்.

C 1951

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஐயாத்துரை சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற களஞ்சிய நிர்வாக பொறுப்பதிகாரி பிறவுன் அன் கொ, கொழும்பு, உரிமையாளர் பேர்த்தி றேடிங் கொ. கொழும்பு)

மறைவு:
24-04-1984

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எங்களை கண்ணின் இமை போல் காத்தருளிய அன்புத் தெய்வமே, நீங்கள் எங்கள் மத்தியில் இருந்து மறைந்து ஈராண்டுகள் மறைந்து விட்ட போதிலும் உங்கள் பிரிவினை தாங்க முடியாது ஆறுத் துயருறுகிறோம்.

சத்தியம் தோற்றதாக சரித்திரம் இல்லை. நீங்கள் எங்களை விட்டு எங்கும் செல்லவில்லை. எங்களிடமே ஒளிவடிவாய் வழிகாட்டியாக நடமாடுகிறீர்கள்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் எங்கள் கண்ணீர் பூக்களை இறைவன் திருப்பாதங்களில் வைத்துப்பிரார்த்திக்கும்:

உங்கள் அன்பு மனைவி,
மகன், மகள்.

117/2, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். C 1786


## PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

COMPUTER PROGRAMMING COURSE
for
Professionals and School Leavers [6 Months]
Lectures by; Mr. N S Rajah, B Sc. (Eng) Hons [London]. A. M. I. C. E.
Week end courses.
Lectures in A.C. Room. Practicals on Apple 11

REGISTRAR,
PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,

59, St. Patricks Road,
Jaffna. [A 459]

## பிரயாண ஒழுங்குகள்

✯ கனடா ✯ டென்மார்க்

முதலிய நாடுகளுக்கு எமது முகவர் உடனடியாக உங்களை அழைத்துச்செல்வர்.

உடன் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

1. S. K. சண்முகராசா,
றஜனிவாசா, நெடியகாடு, வல்வெட்டித்துறை.

2. S. K. சண்முகராசா,
நியூ மரியா றவல்ஸ்,
185/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C 1874)

★ அமெரிக்கத்தாக்குதல் எதிரொலி:

# லிபிய துறைமுகத்தில் சோவியத் போர்க்கப்பல்

திரிப்பொலி, ஏப்.23

**லிபியா மீதான அமெரிக்க தாக்குதலேயடுத்து சோவியத் யூனியனின் கடற்படைப் போர்க் கப்பலொன்று திரிப்பொலி துறைமுகம் வந்தடைந்துள்ளது. இக்கப்பல் நவீன ஆயுதங்களேயும்,ஏனைய சாதனங்களேயும் கொண்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

லிபியாவின் பெங்காஸி, திரிபொலி ஆகிய நகரங்கள் இரு வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கப் போர் விமானங்களினல் தாக்கப்பட்டன இதில் சுமார் 60 பேர்வரை கொல்லப்பட்டனர். லிபியாவின் பல முக்கிய இராணுவ கேந்திர நிலேகளும் சேதமாகின.

'ராடர்' கருவி மற்றும் ஏனைய தகவல் பரிமாற்ற சாதனங்களேயும், ஏவுகணைகளேயும் விமானஎதிர்ப்புபீரங்கிகளேயும் இந்த சோவியத் கப்பல் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லிபியப் பத்திரிகையான 'ஜனு' இக்கப்பல் குறித்துக் கருத்து வெளியிடுகையில், மத்திய தரைக் கடலில் நடமாடிய இச்சோவியத் கப்பல் தற்போது லிபியாவின் பாதுகாப்புக்காக வந்துள்ளதென்று தெரிவித்துள்ளது. (கி)

உலகச் செய்திகள்

இந்த அமெரிக்க விமானத் தாக்குதலேயடுத்து லிபியாவுக்குத் தேவையான நேரத்தில் வேண்டியளவு இராணுவ உதவி வழங்கத் தயாராக இருப்பதாகச் சோவியத் யூனியன் தெரிவித்திருந்தது.

இதன் அடிப்படையிலேயே சோவியத் கடற்படைக் கப்பல் லிபியா வந்துள்ளது இது ஒரு விரைவுப் போர்க்கப்பல் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஹிரோஷிமா அணுக்குண்டைவிட 12 மடங்கு சக்திகூடிய அணுப் பரிசோதனை

வாஷிங்டன், ஏப்-23

ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டைவிட 12 மடங்கு சக்தி கூடிய அணுசக்திப் பரிசோதனை யொன்றை அமெரிக்கா நடத்தியுள்ளது.

இப்பரிசோதனை லாஸ்வெகாஸ் நகருக்கு 17 கிலோ மீட்டர்கள் தொலேவில், நெவாடா பாலேவனத்தில் நடத்தப்பட்டிருந்தது.

இப்பரிசோதனையை நடத்த 69 மீட்டர்கள் ஆழமான பெருங் குழியொன்றும் நெவாடா பாலேவனத்தினுள் தோண்டப்பட்டிருந்தது.

சோவியத் யூனியன் அதன் அணுசக்திப் பரிசோதனை நிறுத்தத்தைக் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் அறிவித்ததைத் தொடர்ந்து அமெரிக்காவினல் நடத்தப்பட்ட பத்தாவது அணுசக்திப் பரிசோதனை இதுவென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## கிளிநொச்சி 'திரேசா' மகளிர் முதலிடம்

(கிளிநொச்சி)

கடைசியாக வெளியான க. பொ. த. (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகளின் படி கிளிநொச்சி மாவட்டத்தில் மிகக் கூடுதலாகச் சித்திகளேப் பெற்று முதலாவது இடத்தை, கிளிநொச்சி புனித திரேசா மகளிர் பாடசாலே தட்டிக்கொண்டது.

செல்வி. சிவபாதசுந்தரலிங்கம் 5பாடங்களில் அதி திறமைச் சித்திகளேயும் 3பாடங்களில் திறமைச் சித்திகளேயும் பெற்றுள்ளார்.

செல்வி ஆறுமுகதாஸ் 4 பாடங்களில் அதி திறமைச்சித்திகளேயும், 4பாடங்களில்திறமைச் சித்திகளேயும் பெற்றுள்ளார்.

செல்வி முத்துக்கிருஷ்னன் 3 பாடங்களில் அதிதிறமைச் சித்திகளேயும். 5பாடங்களில் திறமைச்சித்திகளேயும் பெற்றுள்ளார்.

ஆங்கிலம் தமிழ், இந்து சமயம், கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களிலேயே பலர் அதி திறமைச்சித்தியும் திறமைச்சித்தியும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்திலே நடைபெற்ற க. பொ த. உயர்தர பரீட்சையில் மிக கூடுதலான 259 புள்ளிகளேப் பெற்றவர் மேற்படி பாடசாலேயைச் சேர்ந்த மாணவியாவர்

# வால்ட்ஹெய்ம் ஒரு நாஸிக்குற்றவாளியல்ல

வியன்ன ஏப்-23

''முன்னுள் ஐ நா. செயலாளர் டக்டர் கேர்ட் வால்ட்ஹெய்ம் ஒரு 'நாஸிக்' குற்றவாளி எனச் சொல்லப்படுவதற்குப் போதியளவு ஆதாரங்கள் இல்லே'' என்று ஆஸ்திரியாவின் பதவி விலகும் ஜனதிபதி திரு ருடோல்வ் கீவ்ஸ்லேகர் தெரிவித்துள்ளார்.

திரு கீவ்ஸ்லேகர் தமது பதவிவிலகல் குறித்து தொலேக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னுள் ஐ. நா. செயலாளரும், ஆஸ்திரியாவில் இடம் பெறவுள்ள ஜனதிபதித் தேர்தல் வேட்பாளருமான டாக்டர் கேர்ட் வால்ட்ஹெய்ம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன

டாக்டர் வால்ட்ஹெய்ம் ஒரு நாஸிக் குற்றவாளியென்று, இவர் ஹிட்லரின் துணையாளர்களாகவிருந்த பல யூதர்களேக் கொலேசெய்தார் என்றும் சர்வதேச யூத காங்கிரஸ் சில ஆதாரங்களுடன் வால்ட்ஹெய்ம மீது குற்றம் சுமத்தியிருந்தது

இந்த ஆதாரங்கள் ஐ நா. சபையின் இரண்டாம உலக யுத்தம்பற்றிய கோவைகளிலிருந்தும் எடுக்கப்பட்டிருந்தன

ஆனல் வால்ட்ஹெய்ம இக்குற்றச்சாட்டுக்களே வெகுவாக மறுத்திருந்தார் தனது அரசியல் எதிரிகள் ஆஸ்திரிய ஜனதிபதித் தேர்தலில் தான் நிற்பதை எதிர்க்கும் வகையிலேயே இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர் என்ருர்.

டாக்டர் வால்ட்ஹெய்மின் உண்மைநிலே குறித்து ஆஸ்திரியாவின் பதவி விலகும் ஜனதிபதி திரு. ருடோல்வ் நாட்டு மக்களுக்குத் தகுந்த விளக்கமளிக்கவேண்டியிருந்தது

இதனேயடுத்தே அவர் நேற்றுத தமது தொலேக் காட்சி அறிவிப்பில், திரு வால்ட்ஹெய்ம் ஒரு நாஸிக் குற்றவாளியில்லே என்றும். அவர் ஒரு இராணுவ புலனய்வாளனுகமட்டுமே இரண்டாம்உலக யுத்தத்தில் கடமையாற்றியிருந்ததை அறிய முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (கி)

## சட்டமேலவை நியமனம் நிர்மலா இராஜினுமா

சென்னே, ஏப்-23

தமிழக சட்ட மேலவைச் சபை உறுப்பினர் நியமனத்திலிருந்து வெண்ணிற ஆடை நிர்மலா ராஜினுமாச் செய்துள்ளார்

கடந்த 9ம் திகதியே இம் மேல்சபைக்கு செல்வி நிர்மலா ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் தமது ராஜினுமாவுக்கான காரணத்தை அறிவிக்கவில்லே. இவரை மேல் சபைக்கு நியமனஞ் செய்த தமிழக ஆளுநர் குரான இவரது ராஜினுமாவை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் அறிவித்துள்ளார்

பிரபல நடிகையான வெண்ணிற ஆடை நிர்மலா இன்று 23ந் திகதி (நேற்று) ஆளுநர் முன்னிலேயில் சத்தியப் பிரமாணஞ் செய்து தமது பதவியை ஏற்கவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (கி)

## இந்தியக்கல்விமான்கள் இலங்கை வருவர்

(சென்னே)

இலங்கையின் இனப்பிரச்னேயைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கும் சாத்தியக் கூறுகளே ஆராய்வதற்காக இந்தியக் கல்விமானகளின் குழுவொன்று கொழும்பு வரவுள்ளது

இது விஷயமாக அண்மையில் பெங்களூரில் மகாநாடு ஒன்று நடந்தது அதில் இலங்கைக் கல்வி மான்களின் குழுவொன்று கலந்து கொண்டதும் தெரிந்ததே இதனேத் தொடர்ந்தே இந்தியக் கல்விமான்களின் இவ்வியம் பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

எப்போது இவ்விஜயம் இடம் பெறும் என்பது இன்னமும் முடிவு செய்யப்படவில்லேயெனத்தெரிகிறது. (ய-செ)

## பிரிட்டனில் ஸ்பெயின் மன்னர்

லண்டன், ஏப 23,

ஸ்பெயின் மன்னர் யுவான் காலோஸ் பிரிட்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஸ்பானிய மன்னர் ஒருவர், பிரிட்டனுக்கு கடந்த 80 ஆண்டுகளில் மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜிப்ரோல்ட்டர் ஜலசந்தி தொடர்பாக பிரிட்டனுக்கும், ஸ்பெயினுக்கும்மிடையே இழுபறிநிலேநிலவிவருகிறது ஸ்பெயின மன்னரின் பிரிட்டன் விஜயம் இந்த இழுபறி நிலேக்கு முற்றுப் புள்ளிவைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈ. பி. ஆர். எல். எவ் வின் அஞ்சலி பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

'மரணிக்கவில்லே உரமூட்டுகின்றீர்கள்' என்ற தலேப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலே முன்னணியின் மக்கள் விடுதலேப் படை வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில், 'மக்கள் விடுதலேப் படைக்கும், அரசபடையினருக்கு மிடையே நடந்த நேரடி மோதலில் உயிர்நீத்த செல்வம் (ரவீந்திரன்- முல்லேத்தீவு) அன்பு (செ-தர்மசீலன் புதுக்குடியிருப்பு), யூட் (ஆ. சிவபாலன்-சிலாவததை), குமார் வே பத்மலதன் - கணுக் கேணி) ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது

அத்துடன், உனது முடிவு இலட்சியத்தின் முடிவல்ல? என்ற தலேப்பில் மக்கள் விடுதலேப் படையைச் சேர்ந்த ஜெஸ்லி லெப்டினன்ட் சி. சிவபாலன் முள்ளியவளே ' க்கும் பிரிய முளள தோழனுக்கு' றெயி, ஜெயபாரதி. கரன், செபஸ்தியம்பிள்ளே ஆகியோருக்கு ஓராண்டு நினேவு அஞ்சலி செலுத்தி மேற்படி ஈழமக்கள் புரட்சிகர விடுதலே முன்னணி (ஈ. பி. ஆர். எல். எப்) யின் மக்கள் விடுதலேப் படை யாழ குடாநாடெங்கும் அஞ்சலி தெரிவித்து சுவரொட்டிகளே ஒட்டியுளளது. (ஐ)

## நிவாரண அட்டை விநியோகம்

(நெடுந்தீவு

யாழ் மாவட்டத்தில் கடல் கண்காணிப்பு வலயத்தால் பாதிப்படைந்துள்ள சுமார் பதினையாயிரம் குடும்பங்களுக்கு யாழ் அரசாங்க அதிபரினுல சமூகசேவைகள் திணக்களத்தினூடாக நிவாரணஅட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன

ஐந்து அங்கத்தவரை உள்ளடக்கிய குடும்பம் ஒன்றிற்கு ரூபா 200க்கு மேற்படாத உணவுப் பொருட்களேயும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்டுள்ள குடும்பம் ஒவ்வொன்றிற்கும் ரூபா 250கக்கு மேற்படாத மேற்படாத உணவுப் பொருட்களும் வழங்கப்படுகிறது

இது மார்ச் மாதத்திலி

(7ம் பக்கம் பார்க்க)



## மணி வாக்கு

சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச் சுட நோக்கிற்பவர்க்கு

— குறள்

[தவம் மேற்கொண்டு ஒழுகும் நல்லாற்றலுடையார்க்குத் துன்பத்தினால் வருந்த வருந்த அவர் ஆன்மாவில் ஒளி வீசிக்கொண்டிருக்கும்]

# நமது நோக்கு

## முப்பது வருடப்போர் முடிவடைய வேண்டுமே!

இலங்கை குடியேற்ற நாடாக இருந்க காலத்தில் ஆங்கிலமொழியில் சரித்திரம் படித்ததுமல்லாமல் இங்கிலாந்தினது, ஐரோப்பாவினது சரித்திரத்தையே சிரேட்ட வகுப்பில் மாணவர் படித்தனர்.

ஐரோப்பாவைவிட வேறு சண்டங்கள், தேசங்கள் இருந்ததாக புவியியல் படித்தபோதும் அவை வரலாற்று முக்கியத்துவம் படைத்த நாடுகளாகக் கருதப்படவில்லை.

வரலாறு என்றபோதும் பெரும்பாலும் இங்கிலாந்து நடத்திய போர்களே பாடத்திட்டத்தின் முக்கிய பகுதியாகும். இன்று அதை நினைவு கூருவதானால் இரண்டு போர்கள் குறிப்பிடத்தக்கவை. 100 நாள் போர் என்பது ஒன்று; 100 வருடப்போர் என்பது இன்னொன்று. ஒன்றுக்கொன்று கால எல்லையில் முரண்பட்டபோதும் 100 நாட்களில் ஒருபோர் முடிவடைய இன்னொன்று நூறு வருடங்கள் நடந்திருக்கிறது.

இலங்கை எத்தகைய நாடு, சிறுநாடானாலும் அதன் புவியியல் வரலாறு அக்காலத்தில் சிரேட்ட வகுப்பு மாணவர்களே அறியாத, அறிய விரும்பாத கல்விக்கொள்கை அமுலிலிருந்தது.

இன்று சுதந்திரநாடாக விளங்கும் இலங்கை, ஸ்ரீலங்கா என்றபெயர் பெற்றதோடு சர்வதேச விடயங்களில் பேசப்படும் 'பெருமை' பெற்றிருக்கிறது.

தேயிலைக்குப் பேர்போன நாடு, அதனை உற்பத்தி செய்யும் தொழிலாளர் பிரச்னையால் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தீராத பிரச்னையை ஏற்படுத்திய இந்திய வம்சாவளியினர் தகராறு ஒருவித செங்கமாரி நோயென்றால் இன்று இலங்கைத் தமிழர் பிரச்னை முப்பது வருட முடிவில் மங்கமாரியென்ற நிலையில் ஒரு பெரும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது

நாம் குறிப்பிடும் நோய் நாட்டைப் பீடித்திருக்கிறதென்று சொல்லாமலே விளங்கும். பிரஜாவுரிமைக்கு நீண்டகாலம் போராடிய இந்திய வம்சாவளியினர் செத்துமடியவில்லை. அரசாங்கத்தின் அநீதியான செயல்களால் பலர் உயிர் உடமை, உரிமை இழந்தபோதும் அவர்களின் இயக்கம் கட்டுக்கோப்பாகவிருந்து இன்று வரைக்கும் தளர்ச்சியடையாது வெற்றியும் கண்டிருக்கிறது.

'வெற்றியென்னும் போது' இன்று நாடாளுமன்றத்தில் 94,000 மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கும் சட்டம் நிறைவேறியதை நாம் பெரிதாகக்கருதிக் குறிப்பிடவில்லை.

அதனைத் தொடர்ந்து நடந்த அட்டூழியங்களில் தோட்டத் தொழிலாளர் கொலைக்கும், கொள்ளைக்கும், தீவைப்புக்கும் அஞ்சி இருந்த இடங்களை விட்டு ஓடும் வழக்கம் நிறுத்தப்பட்டதையேநாம் பெரிதெனக் கருதுகின்றோம்.

பிரஜாவுரிமை என்ற ரோயின் மரக் குதிரைக் கதையை (wooden horse-of Troy) விளக்குவதற்கு இங்கு அவசியம் இல்லை. பாதுகாப்புடன் வாழ்ந்து தங்கள் உரிமைகளை உண்மையில் அனுபவிக்க முடியுமான பூரண சுதந்திர நிலைக்கு, இன்றுதொடர்ந்து நடைபெறும் இலங்கைத் தமிழர் போராட்டம் வெற்றியடைய வேண்டுமே!

இது 'நூறுநாள் போருமல்ல' நூறு வருடங்களுக்கு நடந்த ஐரோப்பிய போர் மாதிரியுமானதல்ல; ஆனால் இன்று முப்பது வருடமாக நடந்துவரும் போரென்பதைப் பலர் மறந்துவிடுகின்றனர்.

'சிங்களம் மட்டும்' என்ற சட்டத்தை இரவு பகலாக நிறைவேற்றிய சிங்களச் சீமான்கள் - பல சிங்களத் தலைவர்கள் அதனை எதிர்த்துப் பேசி வாக்களித்தனர்- காலிமுகத்திடலில் 'சில தமிழர்கள் கூதற்காய்கின்றனர்' என்று ஏளனம் செய்ததும், பின்பு சில காடையர்கள் அவர்களைக் கல்லெறிந்து விரட்டி வெளியேற்றியதும் இந்தப் போரின் தொடக்கமெனலாம். தமிழரசுக் கட்சித் தலைவர் - பின்பு தந்தை செல்வநாயகம் என்ற பெயருக்கு ஆளானவர் அன்று தமது சத்தியாக்கிரகப் போரைத் தொடக்கி வைக்க, இலங்கை அரசாங்கம் அதற்கு 'கல்லெறி' கடைசி மருந்தென்று நினைத்திருக்கலாம்

இன்று 30 வருடம் முடிவடையும் இக்காலகட்டத்தில் முழு உலகும் அறிந்த இலங்கை அரசும் - தமிழ்ப் போராளிகளும் நடத்திவரும் பல்வகைப்பட்ட ஆயுதப் போர் உச்சக்கட்டத்தில் உக்கிரம் பெற்றிருக்கிறது.

விமானப் போர், கடற்போர், கெரிலா யுத்தம், நேருக்கு நேர் நிலப்போர்- என்ற பல தினுசுகள் கணக்கிடமுடியாத அழிவை ஏற்படுத்திவிட்டன.

இருந்தும் தமிழினம் அழிந்து பட்டுப்போகவில்லை; அந்தத் துர்க்கதி எமது தலைவிதியோ என்று அஞ்சவேண்டிய நிலையிலும் நாம் இல்லை. என்னதான் அழிந்தபோதும் என்றுமே அழியாத தமிழ் இளைஞர்களின் விடுதலை வேட்கை, பல தோல்விகள் மத்தியில் அரசை அசைத்துவிட்டது. இது உலகறிந்த விடயம். பகற்கனவு நனவான கதை.

தமிழ் மக்களின் தலைவிதியை அவர்களே நிர்ணயிக்கவேண்டுமென்ற முடிவு இன்றைய இருளில் ஒளி வீசுகிறது.

இலங்கை என்ற நாடு- இன்று அழிவுக்குள்ளாகும் நாடு-மீண்டும் புத்துயிர் பெற்றுத் தலை நிமிர்த்த வேண்டுமானால் இந்த முடிவைத் தவிர வேறெந்த முடிவிலும் போர் ஒழியமாட்டாதென்பது திண்ணம்.

## 'அதிரடிப்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டவர்களை எதிரிக்கு காட்டினேன்'

### நல்லநாயகம் வழக்கில் பொலிஸ் அதிபர் சாட்சியம்

(கொழும்பு)

''நல்லநாயகத்தை அதிரடிப்படை அலுவலகத்தில் சந்தித்தேன் அவரை உள்ளே அழைத்துச் சென்று சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு அங்கு அறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரைக் காட்டினேன்.''

கல்முனை பிரஜைகள்குழு முன்னாள் தலைவர் போல் நல்லநாயகத்திற்கு எதிரான வழக்கில் சாட்சியமளித்த பொலிஸ் அதிபர் எச். எல். பியசேன இவ்வாறு கூறினார்.

கல்முனைப் பிரஜைகள்குழு முன்னாள் தலைவரும் கனேடியப் பிரஜையுமான திரு. போல் வேலுப்பிள்ளை நல்லநாயகத்துக்கெதிராக அவசரகாலச்சட்ட விதிகளின்கீழ் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கே. விக்னராஜா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கிளர்ச்சியைத் தூண்டுதல், தவறான வதந்திகளைக் கொண்ட அறிக்கைகளை வெளியிடல் ஆகிய குற்றச்சாட்டுகளின்கீழ் அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது.

எதிர்தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. ஸி யின் குறுக்குவிசாரணையின்போதே எஸ். பி. பியசேன இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

''தம்பிலுவில் மயானத்தில் நடைபெற்ற கொலைகள்பற்றி நல்லநாயகம் கூறியதும் அது மிகவும் ஒரு பாரதூரமான விடயம் எனக்கூறி அதுபற்றி விசாரணை செய்வதற்காக அதை எழுத்துமூலம் தரும்படி நான் கேட்டேன்: காணமல் போனவர்சள் என்று கூறப்பட்டவர்கள் அங்கே இருக்கிறார்களா என்று அவர் கண்டுபிடிப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக அவரை உள்ளே அழைத்துச் சென்று காட்டினேன்

நற்பிட்டி முனைச் சம்பவம் தொடர்பான முறைப்பாட்டில் குறிப்பொன்றை எழுதி அதை விசாரணை செய்யுமாறு எஸ். பி. லியனகேயிடம் கொடுத்தேன்.

களுவாஞ்சிக்குடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் எண்ணிக்கை நிறைந்திருந்ததால் ஏனையோரைக் கல்லடி முகாமுக்குக் கொண்டு சென்று விசாரணைகளைத் துரிதப்படுத்திச் சந்தேக மற்றவர்களை விடுதலை செய்யும்படி பணித்தேன்.''

## "வாழும் சமூகத்துடன் இணைந்து எழுத்தாளர் திகழ வேண்டும்"

### — துணைவேந்தர் வித்தி

[ஐ. சண்முகலிங்கம்]

''பல்கலைக்கழகப் பட்டதாரி மட்டும்தான் எழுத்தாளனாக, திறனாய்வாளனாக இருக்கமுடியும் என்றில்லை. பட்டப்படிப்புகள் படியாதவர்கள் இத்தகையோராக இருக்க முடியும் இருக்கிறார்கள் தெளிவான சிந்தனை: கல்வி என்பன எழுத்தாளனுக்கு அவசியம். எழுத்தாளன் வாழும் சமூகத்துடன் இணைவுள்ளவனாகத்திகழ வேண்டும்.', இவ்வாறு யாழ் இலக்கிய வட்டத்தின் வருட நிறைவு விழாவும் இலங்கை இலக்கியப்பேரவையின் பரிசளிப்பு விழாவும் நல்லூர்இந்து விடுதியில் நடைபெற்றபோது யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் இலக்கிய வட்டம் தனது இலக்கிய முயற்சிகளை நாடளவிய ரீதியில் பன்முகப்படுத்தும் நோக்கமாக இலங்கை இலக்கியப் பேரவை என்ற பெயரில் இலக்கியச் செயற்றிட்ட அமைப்பினை உருவாக்கி ஈழத்து நவீன தமிழிலக்கியம் தோன்றிய காலத்திலிருந்து 1984ம் ஆண்டு வரை வெளிவந்த ஆக்கவிலக்கியங்களில் அவ்வத் துறையில் மிகச் சிறந்த நூலுக்குச் சான்றிதழும் ஞாபகார்த்தப் பணப்பரிசில்களும் வழங்கிய வைபவத்தின் போது பேராசிரியர் 'வித்தி' தொடர்ந்து பேசுகையில், குறிப்பிட்ட குழுவைச் குறிப்பது 'வட்டம்' என்றாகிறது. எனினும் யாழ் இலக்கிய வட்டம் இலங்கையர் பங்குபற்றும் ஒருஅமைப்பாக செயல்பட்டு வருகிறது. இலங்கையில் தமிழ் மொழியிலான இலக்கியங்களுக்கு கடந்த நான்கு வருடங்களாக சாகித்தியப் பரிசுகள் வழங்கப்படவில்லை. இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் நோக்குடன் யாழ் இலக்கிய வட்டம் எழுத்தாளர்களுக்குப் பரிசுகளை வழங்க முன்வந்துள்ளது எனக்கருதுகிறேன். கல்வி, இலக்கியம், அரசியல், ஆய்வுக்கட்டுரைகளையும் இவ்வட்டம் வெளியிடவேண்டும்'' என்றார்.

முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இலக்கியவட்ட விழாவின் காலை நிகழ்ச்சியாக ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெற்றது செயலாளர் ஆண்டறிக்கை, செயல்திட்ட அறிக்கை, பொருளாளர் அறிக்கை, உத்தியோகத்தர் தெரிவு முதலியன இடம்பெற்றன.

யாழ் இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் பலரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர் மதிய போசனத்தைத் தொடர்ந்து பிற்பகல் நிகழ்ச்சிகள் 2 மணிக்குஆரம்பமாகின.

யாழ் தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க 'சசிபாரதி' தலைமைதாங்கி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

கல்வயல் வே. குமாரசுவாமி தமிழ்த்தாய் வணக்கம் பாடியதைத் தொடர்ந்து வரவேற்புரையைச் செம்பியன் செல்வன் நிகழ்த்தினர்,

தொடக்கவுரையை யாழ் மாநகர சபை ஆணையாளர்

[5ம் பக்கம் பார்க்க]

## நாவலடியில் சித்திரைத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்தெற்கு நாவலடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த சித்திரா பௌர்ணமி விழா இன்று நடைபெறுகிறது.

முற்பகல் நிகழ்ச்சியாக அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும், சித்திரைக் கஞ்சி வழங்கலும் நடைபெற்று மாலை நிகழ்ச்சியாக அம்பாள் வீதிஉலாவும் இடம்பெறும்.

## பெருமனது வைத்திடுவாய்

தேரேறி வந்திருக்கும் தென் மானயம் பதியோனே
பாரொடு விண்ணைப் பரந்தவனின் புகழ் மைந்தா
ஈராறு நாட்கள் உன் திரு உலாக்கோலம் கண்டோம்
பேர்மேவு சிவானந்தப் பேறெமக்கு நல்கிடுவாய்.

—சாந்தா தம்பிஐயா

★ ★ ★

## தேர்க் கோலம்

காவடி ஆடி வந்தேன் கந்தா உன்
சேவடி காண வந்தேன் நல்ல
பாவடி பாடி வந்து உந்தன்
பூவடி நானும் கண்டேன்.

மானியம் பதியினிலே உந்தன்
மாட்சிமை நானுங் கண்டேன்- நல்ல
மாந்தர்க்கு நீ அருளும்- அந்த
மாண்பினை நானும் கண்டேன்.

தேரினில் நீ ஏறி வரும்- அந்த
திவ்விய அழகு கண்டேன் வள்ளி
தேவ யானையுடன் நீ தரும்
தேர்கோலம் நானும் கண்டேன்.

வேலக்கை பிள்ளையாரே எங்கள்
வேதனை தீர்த்தருள் வாய் ஒன்றாய்
வேண்டுதல் செய்து நின்றோம் எங்கள்
விக்கினம் தீர்த்தருள்வாய்

—மாலா தர்மலிங்கம்

## அப்பர்சிலை பவனி

(யாழ்ப்பாணம்)

யாழ் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகராலயத்தில் தங்கியிருந்த திருக்கேதீச்சரம் செல்லும் அப்பர் சுவாமி திருவுருவம் இம்மாதம் 26ம் திகதி சனிக்கிழமை காலைபவனியாகப்புறப்பட்டு கோப்பாய் ஸ்ரீசுப்பிரமணிய கோட்டத்திற்கு செல்லும்,

பண்டாரக்குளம மருதவளவு விநாயகராலயத்தில் அப்பர் சிலைதங்கியிருந்தபோது அகில இலங்கைத் திருமுறைமன்றத்தின் ஆதரவில் தினமும் திருநாவுக்கரசர் புராணப் படனமும் நடைபெற்றது.

25ம் திகதி வெள்ளிக்கிழமை காலை புராணபடன பூர்த்தியும் இலவச தேவார வெளியீடும் நடைபெறும். (ப)

# இனப்பிரச்னைத் தீர்வுக்கு இ. தொ. கா. யோசனை

## 'தொண்டா' சமர்ப்பிப்பாராம்

[கொழும்பு]

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்றினைக் காணுமுகமாக சர்வ கட்சி மாநாட்டில் இ. தொ. கா. வினல் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளை மீண்டும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கலாமெனத் தாம் கருதுவதாக இ. தொ. கா. தலைவரும் கிராமிய கைத்தொழில் அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடு திரும்பிய அமைச்சர் நேற்று தனது அமைச்சு அலுவலகத்தில் அளித்த பத்திரிகையாளர் மாநாட்டிலே இதனைத் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

''பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதாயின் எந்தப் பகுதியினரும் முன் நிபந்தனைகளின்றி நம்பிக்கையுடன் பேச்சுக்கு இணங்க வேண்டும்'' என்றார்.

### வட-கிழக்கு இணைப்பு

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி அமைச்சர் பிரஸ்தாபிக்கையில், இணைப்பு இல்லாவிட்டால் தமிழர் ஒதுக்கப்பட்டு விடுவர்என ஒரு சாராரும், இணைப்பை வழங்கினல் அது ஈழத்துக்கான முதல்படியாக இருக்குமென மறு சாரார் மனத்திலும் தப்பபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. பிரச்னையைத் தீர்க்க குறைந்தபட்சம் அல்லது கூடுதல்பட்சமாக இதைத்தான் வழங்குவோம் என்ற வரையறை இருக்கக்கூடாது. பிரச்னையைத் தீர்க்க என்னென்ன தேவையோ அவையே கருத்தில் கொள்ளப்படவேண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியை விடபோராளிகள் சக்தி பெற்றவர்களாக விளங்குகின்றனர்.'' எனக்கூறினர்.

### தமிழ்நாட்டின் நிலை

தமிழ்நாட்டிலுள்ள தற்போதைய நிலை பற்றி குறிப்பிடுகையில் ''83ல் இங்கு என்ன நிலை இருந்ததோ அதே நிலைதான் இப்போதும் இருப்பதாக தமிழ்நாட்டுப் பத்திரிகைகளும் மக்களும் நினைக்கின்றனர். ஒரு சில விதிவிலக்கானவை'' எனக் கூறினர்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் சுயமரியாதையுடனும், உரிமைகளுடனும் வாழவேண்டுமென்பதே தி மு.க தலைவர் திரு. கருணநிதியின் விருப்பமெனவும் திரு. தொண்டமன் கூறினர். (ய-செ)

---

# வாழும் சமூகத்துடன்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சி. வி. கே. சிவஞானம் நிகழ்த்தினர்.

முதிய எழுத்தாளர்கள் முதல் இளந் தலைமுறை எழுத்தாளர்கள், சஞ்சிகை ஆசிரியர்கள், கவிஞர்கள் என மண்டபம் நிறைந்த இலக்கிய கர்த்தாக்களைக் காண முடிந்தது.

வர்த்தகப் பிரமுகர்கள், வாசகர்கள் எனப் பலரும் இவ் விழாவில் பிரசன்னமாய் இருந்தனர்.

'இலங்கை இலக்கியப் பேரவை' என்ற யாழ். இலக்கியவட்டத்தின் செயற் திட்ட அமைப்பு 1984 ம் ஆண்டு வரை வெளிவந்த ஆக்கவிலக்கியங்களுக்கான பரிசில்களை வழங்கியது. இலக்கிய ஆய்வு, நாவல், சிறுகதைத் தொகுதி. காவியம், கவிதைத் தொகுதி, நாடகத் தொகுதி, சிறுவர் இலக்கியம் ஆகியனவற்றுக்கான பரிசில்கள் வழங்கப் பெற்றன முறையே பேராசிரியர் சு. வித்தியானந்தன், செங்கை ஆழியான், செ. கதிர்காமநாதன், நிலா வணன், மஹாகவி, செம்பியன் செல்வன், த துரைசிங்கம், பா சத்தியசீலன் ஆகியோர் இவற்றுக்கான பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்,

பணப் பரிசில்களை வர்த்தகப் பிரமுகர்கள் நினைவுப் பரிசில்களாக வழங்கி இருந்தனர். தொடர்ந்து இரு கவிஞர்கள் பாராட்டப் பெற்றுப் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படும் நிகழ்சி இடம் பெற்றது.

கவிஞர். வே. ஐயாத்துரை தமது உடல் நிலையையும் பொருட்படுத்தாது நேர்முகமாகவந்து கலந்துகொண்டார் கவிஞர் கதிரேசர்பிள்ளை கலந்து கொள்ளவில்லை. கவிஞர்களான செ. கதிரேசர் பிள்ளை, வே. ஐயாத்துரை ஆகிய இருவரையும் பாராட்டி மயிலங்கூடலூர் பி. நடராசன் காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோர் பேசினர்கள். பாராட்டுப்பத்திரங்கள் வழங்கப் பெற்றன.

4 வது நிகழ்ச்சியாக நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. கல்வயல் வே. குமாரசாமியின் 'மரணத்தின் நனவுகள்' யாழ் வாணனின் யாழ் இலக்கியவட்டம்: இருதசாப்தங்கள் சில சிந்தனைகள்' ஆகிய இருநூல்களும் வெளியிட்டு வைக்கப்பெற்றன.

வெளியீட்டுரைகளை திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) திரு. முருகையன் ஆகியோ நிகழ்த்தினர்கள்.

---


கடைசிநேர வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

சுண்டிக்குளியில் நல்ல சுற்றுடலில் சகல நவீன வசதிகளுடன் பெரிய வீடும் வளவும், பள்ளிக்கூடங்களுக்கும், பிரதான வீதிக்கும் அருகாமையில், உடன் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப் படும். தொடர்பு: விளம்பர இல. C 1968

**காணவில்லை**

198/5, பொன்னப்பா லேன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் ஸ்ரீ மோகன்— வயது 14, சிவலை, கறுப்பு நிற லேடிஸ் சைக்கிளுடனும் பிரம்புக்கூடையுடனும் காணமற்போய்விட்டார். அவர் நீல ரீ ஷேட்டும், பச்சைநிறக் காற்சட்டையும் அணிந்திருந்தார். வாய்பேசமாட்டார் நெற்றியிலும், நாடியிலும் காயம் உண்டு. இவரைக் கண்டால் தயவுசெய்து மேற் குறித்த விலாசத்திற்கு அறிவிக்கவும். A 616

**தேவை**

சுன்னுகம், சித்திரகலா, வின்சன் ஆகிய ஸ்ருடியோக்களுக்கும் வேலைதெரிந்த அல்லது வேலைகள் பழகவிரும்பும் ஆட்கள் தேவை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சுற்றுடலிலே இருப்பவர்கள் விரும்பத்தக்கது. சித்திரகலா ஸ்ருடியோ சுன்னுகம். C 1965

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-45,
ராஜேந்தர் - சங்கீதா
மைதிலி என்னைக்காதலி

எம்பயர் 'B' சினிமா
The Deistroyers

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


---

## டானியலுக்கு இன்று கரம்பனில் அஞ்சலி

(வேலணை)

பிரபல நாவலாசிரியர் அமரர் கே. டானியலின் மறைவு குறித்து அஞ்சலிக் கூட்டமொன்று இன்று வியாழக் கிழமை காலை 9-30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த வடகரம்பன் அண்ணா ச. ச. நிலைய மண்டபத்தில் திரு. ஆ. நாகராசா தலைமையில் நடைபெறுகிறது,

---

கந்தளாய்:

## இயக்கம் உரிமை கோருகிறது

(ராய்ட்டர்)

கந்தளாய்க்குளம் உடைப்பெடுத்தமைக்குத் தாமே பொறுப்பு என்று ஈழப்புரட்சிவாத கம்யூனிஸ்ட் இயக்கம் திருவனந்தபுரத்தில் உரிமை கோரியுள்ளது.

மேற்படி இயக்கத்தின் தலைவர் திரு. பி. கே. பாலசுப்பிரமணியம் இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இலங்கையின் பொருளாதாரத்தைப்பலவீனப்படுத்தும் தமது நடவடிக்கைகளின் ஒருபகுதியே இதுவென்றும், இந்தச் சம்பவத்தில் இருநூறுபேர் இறந்துள்ளதுடன் 40 ஆயிரம் பேர் வீடிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். [ய-ரா]

---

## யாழ். ஆஸ்பத்திரியில் சிறுவர் விளையாட்டுப் பிரிவு

[யாழ்ப்பாணம்]

சிறுவர்களுக்கான விளையாட்டுப் பிரிவொன்று, யாழ். போதனு வைத்தியசாலைச் சிறுவர் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சிறுவர்களுக்கான விளையாட்டுப்பிரிவை நாளை வெள்ளிக்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக, வடமாகாண எஸ். சி. எஸ். இணைப்பதிகாரி திருமதி கைலாசப்பிள்ளை திறந்துவைப்பார்.

இந்த விளையாட்டுப்பிரிவு பிரித்தானிய அரசினர் எஸ். சி. எஸ். பிரிவால், பேராசிரியர் டி. ராமதாஸின் முயற்சியினல் நன்கொடையாகப் பெறப்பட்டது.

---

## வீதித்தடை தற்காலிக நீக்கம்

[சுண்டுக்குளி]

அஸ்பெஸ்டஸ் சீமெந்துத் தொழிற்சாலை முகாமைப் பணிப்பாளர் திரு. ம. கணேசனை விடுவிக்கக்கோரி அத் தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 300க்கும் அதிகமான ஊழியர்களின் வீதித்தடைப் போராட்டம் நேற்று மாலையுடன் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

---

## தொண்டமனாறு நேரடி மோதல்

[யாழ்ப்பாணம்]

தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கு மிடையே நேற்றுப் பிற்பகல் நேரடி மோதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இச்சவத்தில் சேதவிபரம் பற்றி எதுவும் தெரிவிக்கப் படவில்லை. [மா]

---


முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
வே. க. இராசலிங்கம்
(ஸ்தாபகர்: வே. கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ் கொழும்பு)

தோற்றம்: 06-01-1911
மறைவு: 04-05-1985
திதி: 24-04-1986

ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது உங்கள்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வசந்தம்
மானிப்பாய். C 1964


---


## பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு காணி சுவீகரிப்பு அறிவித்தல்

மேற்படி சுவீகரிப்பு எல்லைக்குள் தமது வீடு, வாசல், உடமைகளைவிட்டு வெளியேறியோர்: தங்கள் முன்னைய கிராமசேவையாளர்களைச் சந்தித்து நிவாரணம் பெறும் படிவத்தைப்பெற்று, முறைப்படி பூர்த்தி செய்து, தெல்லிப்பழை உதவி அரசாங்கஅதிபரிடம் 30-4-86க்கு முன் ஒப்படைக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். நிவாரணம் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்.

(1) கூலிவேலை செய்தோர் (இவர்கட்கு தற்காலிக நிவாரணமாக 2 மாதத்திற்கு உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றது)

(2) குத்தகைக்குக் கமம் செய்தோர்

(3) சொந்தக்காணியில் கமம் செய்தோர்

(4) தற்காலிக வதிவிடங்களை இழந்தோர்

(5) நிரந்தர வீடு, கடை கட்டிடங்களை இழந்தோர்

(6) அபிவிருத்தி செய்யப்படாத தரவை நில உரிமையாளர்கள்

மேற்குறிப்பிட்டவை யாவும் அரசாங்கத்தால் உத்தியோக பூர்வமாக அனுமதிக்சப்பட்ட காணி சுவீகரிப்பு எல்லைக்குள் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்.

வை. மு. பஞ்சலிங்கம்
யாழ். மாவட்ட செயலாளரும் அரச அதிபரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

செயலகம்,
22-04-1986. (A 615)


---

## விஸ்வமடுவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களிலிருந்து 150க்குமேற்பட்ட இராணுவத்தினர் தேடுதல் வேட்டைக்காக விஸ்வமடு நோக்கி கடந்த திங்கள் இரவு புறப்பட்டனர்.

முல்லைத்தீவு இராணுவமுகாமிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் இராணுவத்தினர் காட்டுப்பருதிகளில இறக்கப்பட்டனர் மற்றைய இருமுகாம்களிலிருந்தும் காட்டுப் பகுதி ஊடாக இராணுவத்தினர் நடந்துசென்றனர். இறந்த இருவரும் சைதானவரும் மலைநாட்டைச் சேர்ந்தவர்கள் றெட்பானு குடியேற்றத்தில் குடியமர்த்தப்பட்டவர்களாவர். (மா


---

## ஜே. ஆர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. சுப்பிரமணிய சுவாமி தெரிவித்திருக்கிறார்

இக்குழுவில் ஐக்கியநாடுகள் சபையின் முன்னுள் அமெரிக்கத் தூதுவரும் மனித உரிமைகள் இயக்கத்தைச்சேர்ந்தவருமான திரு அன்றுயங் என்பவரும் அங்கம்வகிக்க இருப்பதாக அவர் வேலும் தெரிவித்தார். (வா)



வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் 40 லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் 71 அடி உயரமும் 7 தளங்களையும் கொண்டதுமான இரஜகோபுரத்தின் அழகிய தோற்றம். (படம்: புலோலி — நிரு.)

வளர்முக நாடுகளில்

# வளர்ந்த நாடுகள் நடத்திவரும் சுரண்டல்

## கருத்தரங்கில் விளக்கம்

[வேலணை]

வளர்ந்த நாடுகள் பல இன்று அபிவிருத்தியடையாத நாடுகள் எனக் கருதப்படும் மூன்றாவது உலகநாடுகளைப் பலவழிகளாலும்சுரண்டி வருகின்றன

இந்த ரீதியில் சுகாதார விடயத்திலும், அச்சுரண்டல் நடவடிக்கைகள் ஏற்பட்டுவருகின்றன. இதன் மூலமும்எமது சுகாதாரம் மிக மிகப் பாதிக்கப்பட்டு வருகின்றது என்று ஊர்காவற்றுறை புனித தேவ மாதா ஆலயப் பங்குத்தந்தை அருள்திரு எம் ஈ. பயஸ் அடிகளார் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரியின் விடுதியில் நடைபெற்ற சௌக்கிய சேவைத் தொண்டர்களின் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்

மனித முன்னேற்ற இயக்கத்தினரும், சௌக்கிய சேவைப் பகுதியினரும் இணைந்துநடாத்திய பயிற்சிக கருத்தரங்கில் அருள்திரு பயஸ் அடிகளார் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

வளர்முக நாடுகள் பாவனைக்கு உகந்த -தம் நாடுகளில் விற்பனைக்குத் தடைவிதிக்கப்பட்ட மருந்துகளைப் பலவித கவர்ச்சி விளம்பரங்கள் மூலமும் இலவச வினியோகங்கள் மூலமாகவும் அழகிய பெட்டிகளில் அடைத்து மக்கள் மத்தியில் விற்பனைக்கு விடுகின்றன எமது நாட்டிற்கும் இவ்விதமாகவே விற்பனைக்கு வருகின்றன இவ்விதமாக்குறைந்த விலைக்குக் கிடைக்ககூடிய மருந்துகளை வாங்கிப் பாவித்து வருவதினால் மக்கள் மத்தியில் சுகாதாரம் பாதிக்கப்பட்டு வருவதுடன் மனிதர்களின ஆயுட்காலமும் குறைந்து கொண்டே வருகிறது என்றார். அவர் மேலும் பேசுகையில் எமது பாரம்பரியமான சுதேச வைத்திய முறைகளுக்கு புத்துயிரளித்து நவீனகண்டு பிடிப்புகளுடன் அதனை வளர்க்க எமது மக்கள் முன்வரவேண்டும்.

இனிமேல் நாம் அடிமைகளாகிக் கொண்டிருக்க கூடாது பல்தேசிய கொம்பனிகள் முதலாவது உலக நாடுகளில பாவிக்க முடியாத விலக்கப்பட்ட மருந்து வகைகளை இன்னமும் விற்றுக் கொண்டேயிருக்கின்றன இவற்றை நாம் பாவிக்கக் கூடாது. நாமெல்லோரும் மேற்கு நாட்டு மருத்துவ முறைகளைக் கொண்டு பிணிகளைத் தீர்க்காது சீன தேசத்து மருத்துவ முறை போல எமது சுதேச வைத்திய முறைகளில் புதிய வடிவங்களைப் புகுத்தி எமது மக்களைக் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கடற்பகுதியில் பீரங்கிவேட்டுக்கள்

# பாதுகாப்புத்தேடி மக்கள் இடம் பெயர்வு

(மாவிட்டபுரம்)

கடற் பகுதியில் தொடர்ந்து நடக்கும் பீரங்கி வேட்டுக்களால் மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

மயிலிட்டி, தொண்டமனாறு, ஊறணி, காங்கேசன்துறை கடற்பகுதியில் தரித்துள்ள கடற்படை கப்பல்களில் இருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படுவதால் அப்பகுதியில் வாழும் மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு குடும்பம் குடும்பமாக இடம் பெயர்ந்து செல்கின்றனர்.

புங்குடுதீவில் பலவீடுகளில்

# ஆயுதம்தரித்த கோஷ்டிகள் நடத்தியுள்ள கொள்ளை

(வேலணை)

சிலதினங்களுக்குமுன் புங்குடுதீவு இறுப்பிட்டிப் பகுதியில் நள்ளிரவில் ஆயுதங்கள் ஏந்திய இளைஞர்கள் பல வீடுகளை உடைத்து வீட்டிலுள்ளோரை பயமுறுத்தி தங்க நகைகள், ரொக்கப்பணம், மற்றும் பெறுமதியான பல பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் செயல்களினால் புங்குடுதீவுப்பகுதியிலும் அதனை அண்டிய ஏனைய இடங்களிலும் உள்ள மக்கள்மத்தியில் அச்சமும் பயப் பீதியும் ஏற்பட்டுள்ளது. இக் கொள்ளையினைக் கண்டித்து புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்ததனியார்போக்குவரத்துச் சங்கத்தினர் நடத்திவரும் மினி பஸ் அனைத்தும் 20 திகதி புங்குடுதீவு யாழ்ப்பாணத்துக் கிடையிலான சேவையினை நிறுத்திக் கொண்டனர். இதனால் புங்குடுதீவில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் மக்களும் வெளியிடங்களில இருந்து புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற இடங்களுக்கு செல்லும் மக்களும் பிரயாண வசதிகள் இன்றி பெரும் சிரமத்துக்குள்ளானார்கள்

(புங்-நிருபர்)

# கண்ணிவெடி மீட்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு தாண்டவன் வெளி வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி ஒன்று நேற்றுக் காலை அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து மட்டக்களப்பு நகரில் அதிரடிப்படையினர் பொலிஸ் நாய்கள், முகமூடி அணிந்தவர்கள் சகிதம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இத்தேடுதல் வேட்டையின் போது பத்துக்கு மேற்பட்டோர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டனர்.

(மா)

# 'பூஸா'விலிருந்து விடுதலை

[கொழும்பு]

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கந்தையா வரதராஜா என்ற இளைஞர் கொழும்பு மேல் நீதிமன்ற விசாரணையைத் தொடர்ந்து விடுதலை செய்யப்பட்டார்.

மன்னம்பிட்டி வாசியான இவர் தீவிரவாத வகுப்புகளில் கலந்து கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் மன்னம்பிட்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுக் கடந்த ஒருவருட காலமாக பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [ய-செ]

# கல்விக் கலந்துரையாடல்

[மானிப்பாய்]

மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோரது கூட்டமும் கலந்துரையாடலும் வரும் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் இணுவில் இராமநாதன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் மானிப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ், தனஞ்சயன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது

யாழ் கல்விப்பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் சிறப்புரை நிகழ்த்தவிருக்கின்றார் விசேட வட்டாரக் கல்வியதிகாரிகளும் இதில் கலந்து உரை நிகழ்த்தவிருக்கின்றார்கள்.

அதிபர்களும் கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, வர்த்தகம், விவசாயம், ஆங்கிலம், மனையியல், இசை, நடனம் சித்திரம், உடற்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள்,

# செல்வச்சந்நிதி ஆலய சம்பவம்: நேரில் பார்வையிடுமாறு அமைச்சருக்கு அழைப்பு

[யாழ்ப்பாணம்]

"தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில பூசைகள் செய்யலாம் என அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து மறுநாள் (கடந்த திங்கட்கிழமை) பூசை செய்யச் சென்ற பூசகர் ஒருவர் நிர்வணமாக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார் மற்றொரு பூசகருக்சுடப்பட்டார். கோவில் தேர் முற்றாக எரிக்கட்பட்டுள்ளது. மேலும் மடங்கள் எரிக்கப்பட்டுள்ளன பலர் கொல்லப்பட்டுள்ளனர் இதனை நீங்கள் நேரில் வந்து பார்வையிடவேண்டும்"

இவ்வாறு இலங்கையிலுள்ள இந்துக் கோவில்களினதும், தாபனங்களினதும் பாதுகாப்புக்கான அமைப்புக்குழு சார்பில் அதன் போஷகர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இந்துக் கலாசார அமைச்சரிடம் தொலைபேசி மூலமாக அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை முதல் ஆரப்பமாகிநடைபெற்ற தொண்டமனாறு சந்நிதஆலய தேர் எரிப்பு, மட எரிப்பு, பூசகர்கள் கொலை. மக்கள்கொலை என்பன பற்றி ஆராய்வதற்கென மேற்படி அமைப்பு உடனடியாகக் கூடியது

நல்லை ஆதீனத்தில் இக்கூட்டம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமையவே, அமைச்சர் இராசதுரையுடன் தொடர்புகொளளப்பட்டது

இதேவேளை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவும், தொண்டமனாறு செல்வச் சந்நிதி தர்மகர்த்தாக்கள் சபையும் நேற்று மாலை அவசரமாகக்கூடி மேற்படி ஆலயத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஆராய்ந்தனர்.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு சார்பிலும் தர்மகர்த்தாக்கள்சபை சார்பிலும் திரு கே. முருகமூர்த்தி இந்து கலாசார அமைச்சர் திரு இராசதுரையை தொலைபேசியில் தொடர்புகொண்டு நேரடியாக வந்து மேற்படி ஆலய சேதங்களைப் பார்வையிடும்படி வேண்டினார் அமைச்சர்ஆவன செய்வதாகக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஐ]

# வல்லன் பஞ்சாயம் சாதனை

[புங்குடுதீவு]

புங்குடுதீவு 9ம் வட்டாரத்தைச் சேர்ந்த வல்லன் பஞ்சாயம் இலங்கையிலேயே மிக அதிகமான வழக்குகளைத் தீர்த்து வைத்துச் சாதனை ஏற்படுத்தியுள்ளது.

அகில இந்திய வானொலியின் மாநிலச் செய்தியில் கூட இந்த வல்லன் பஞ்சாயத்தின் விசேடசாதனை அறிவிக்கப்பட்டது.

இவை பற்றிய செய்தி ஈழநாடு பத்திரிகையில் ஏற்கனவே வந்துள்ளது,

# புதுக்குடியிருப்பு ஊடாக பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளம் ஊடாக நடைபெற்றுவந்த முத்தையன்கட்டு பஸ்சேவை, பாதுகாப்புக்கருதி புதுக்குடியிருப்பூடாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

கற்சிலைமடுக்கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளரும் திட்டக்குழு உறுப்பினருமான [பேராறு] திரு அ குமாரசுவாமி, யாழ்.பஸ்டிப்போ முகாமையாளரைச் சந்தித்து நிலமையைத் தெரிவித்ததின் பேரில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மாங்குளம் ஊடாக முத்துஐயன் சட்டுக்குச் செல்லும் பஸ், கிளிநொச்சி, கொக்காவில், மாங்குளம், ஒட்டுசுட்டான் இராணுவமுகாங்களைத் தாண்டிச் செல்வதால் பிரயாணிகள் பெரும்பீதியுடன் பயணம் செய்ய வேண்டியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. [ஒட்டு நி.]

# இன்றைய பலன்

மாதம் - சித்திரை
திகதி: 11, (1986 - 4 - 24)
வியாழக்கிழமை:
திதி - பூரணை மு. இ வரை
நக்ஷத்திரம் - சித்திரை பி. ப. வரை.

மேடம்:-மனையில் பூசல்கள் தோன்றி மறையும் தனிமையை விரும்புவீர்கள். தொழில்புரியும் இடத்தில் சண்டுடைப்பு வேலைகள் நடைபெறும்.

இடபம்:-அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் புலவர்கள் போற்றப்படுவார்கள்.

மிதுனம்:- கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும், சிலர்புதியவாகனத்தை கொள்முதல் செய்வதில் கவனம் செலுத்துவர்.

கடகம்:- உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும், சிலருக்கு உஷ்ணரோகத்திற்கும் இடமுண்டு

சிங்கம்:- பிரிந்தவர்கள்வாழ்கையில் மீண்டும் இணைவர். குடும்பப்பிரச்னைகளில் சுமூக மனநிலை தென்படும் செல்வாக்கு பெருகும்.

கன்னி:- திரைமறைவில் சூழ்ச்சிகள் தடைபெறும் வந்து சேரவேண்டிய பணத்தில் மீண்டும்தடையேற்படலாம் நடைமுறையிலும் சிக்கல் ஏற்படும்.

துலாம்:- புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள். தெய்வத்தின் அருளும் கிடைக்கும் சிலருக்கு உயர்வும் உண்டு

விருச்சிகம்:- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டுவியாபாரத்தால் முன்னேற்றம் எண்டு. புதுமனை கட்டுவதற்கும் இடமுண்டு.

தனுசு:- வணிகத் துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும், புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும்

மகரம்:- துன்பத்தின் ரேகைகள் படரும், எதிலும்தயக்கம் ஏற்படும், ஆதரவு கொடுத்தவரே முடிவில்கையைவிரிப்பர்.

கும்பம்:- அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள், சிலர் வழக்குவிவகாரங்களில் மாட்டிக் கொள்ளலாம், குறுக்கு வழியை தவிர்க்கவும்.

மீனம்:- பெரிய இடத்து சினேகம் ஏற்படலாம் ஆத்மீகப்பணிப்பயில் ஆர்வம் பிறக்கும்புது வழிகளின்மூலம் பணம் கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## 'அஸ்பெஸ்டஸ்' தொழிற்சாலை பணிப்பாளர் கடத்தலை எதிர்த்து மறியல்

(சுண்டிக்குளி)

சுன்னுகம் அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் தொழிற் சாலை முகாமைப் பணிப்பாளர் திரு. ம. கணேசன் இம்மாதம் 4ந் திகதி இரவு இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படாததை ஆட்சேபித்து அத்தொழிற்சாலையில் பணிபுரியும் நூற்றுக் கணக்கான ஊழியர்கள்நேற்று முன்தினம் முதல் வீதித் தடை போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

ஆனைக்கோட்டைச் சந்தி, மானிப்பாய், சுதுமலைச்சந்தி, நவாலி, அரசடி, பிப்பிலிச் சந்தி, ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடி, கூழாவடி உட்பட பத்துக்கும் மேற்பட்ட இடங்களில்தடை போடப்பட்டுள்ளது.

இதனுல் இப்பாதைகளின் ஊடாக எந்தவித வாகனங்களும் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

திரு. கணேசன் விடுதலை செய்யப்படும்வரை வழிமறிப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுமெனகூறப்படுகிறது.

## நகை, பணம் கொள்ளை இரவில் நடந்த துணிகரம்

(யாழ்ப்பாணம்)

வீடொன்றினுள் ஆயுதப் பாணியாகப் புகுந்த இனந் தெரியாத மூன்று இளைஞர்கள் வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்தி நகைகள், ரொக்கப்பணம் உட்பட சுமார் 70, ஆயிரம் ரூபா பெறுமதியானப் பல பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த 19-ந் திகதியன்று இரவு இணுவில் புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள செ. நவரட்ணம் என்பவரது வீட்டிலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவ தினம் இரவு, ஆயுதப்பணியாக வந்தவர்கள் வீட்டினுள் புகுந்து மின்சாரத்தை துண்டித்துவிட்டு அனைவரையும் கீழே படுக்குமாது பணித்து இக்கொள்ளையை நடத்தினராம்.


மேற்படி வீட்டில் வாடகைக்கு குடியிருந்த உடுவில் கல்லூரி ஒன்றின் ஆசிரியரின் மனைவியிடமிருந்து தங்கநகைகள், ரொக்கப்பணம் மூவாயிரம் ரூபா என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

## மருந்து வகைகள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் பொம்மைவெளி புதிய சோனகத்தெரு, சாபிநகர், வயல்வெளி சூரியவெளி ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் உள்ள 100க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சிரங்கு நோயைத் தடுப்பதற்காக சதர்க்காரம் உட்பட பல மருந்துவகைகளும்மருத்துவ ஆலோசனைகளும் அண்மையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவப்பீட மாணவர்களினுலும் சர்வோதய தொண்டர்களினுலும் வழங்கப்பட்டது. இதனுல் இப்பகுதியில் வாழும் பெரும்பான்மை மக்கள் பெரிதும் நன்மையடைந்தனர்.

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



மாணிக்கம் மகேஸ்வரன்

ஆண்டவன் படைப்பில்: 16-03-1960

ஆள்பவன் பறிப்பில்: 04-05-1985

365-வது தினம்ஆனலும் நீங்காத நினைவுடன் எம் நெஞ்சில் நிலையான இடம் கொண்டுள்ள நீ அழியாத எம் நெஞ்சில் ஆண்டொன்றைக் கழித்து விட்டாய் அரக்கன் அழித்த உன்னுயிரை ஆண்டு பல கழிந்தாலும் அழிக்க முடியாது எம் முள்ளத்திலிருந்து. பாசத்துடன் வளர்த்து பரிதவிக்க எம்மை நீ விட்டுச் சென்று ஓராண்டு காலமதில் உன் திதி இன்று. திதி நாளில் உன் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்.

அன்பு அம்மா, அப்பா,
சகோதர சகோதரிகள்,
சின்னம்மா, மாமன்மார்,
மாமிமார்,
மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

C 1950

## ★ பலாலி விமானநிலைய விஸ்தரிப்பு செப்பனிடும் வேலையில் ஆயுதப்படையினர் தீவிரம்

(மாவிட்டபுரம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு பிரதேசத்தில் இருந்து மக்கள் வெளியேறியதால் அப்பகுதியில் செப்பனிடும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

ஆயுதப் படையினர் இப்பொழுது அப் பகுதியிலுள்ள வீடுகளைத் தகர்த்தும் பற்றைகளை வெட்டியும் சிறு குடிசைகளை எரித்தும் விமான நிலைய விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளனர். அச் சமயங்களில் குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்கின்றன.

## "மூக்குக்கண்ணுடிகள் விரைவில் வழங்கப்படும்"

[மாவிட்டபுரம்]

"வடபகுதி லயன்ஸ்கழகத்துக்கு அனுப்பப்படவிருக்கும் மூக்குக்கண்ணுடிகள் விரைவில் வழங்கப்படும், ஆனுல் இவை இங்குவந்து நாம் வீண்தாமதம் செய்வதாக வெளிவந்த செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை."

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழகதலைவர் ஏ வி. சர்மா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

"மேற்கு ஜேர்மன் நிறுவனம் ஒன்றிடமிருந்து லயன்ஸ் கழகத்துக்கு அன்பளிப்பாகப் பெறப்பட்ட சுமார் 95 ஆயிரம் மூக்குகண்ணுடிகள் யாவும் கடந்த 7 மாதமாக தலை நகரில் துறைமுகத்தில் இருந்து அண்மையில் மிகுந்த முயற்சியால் வெளியே எடுக்கப்பட்டன.

"இவற்றுள்ளும் ஒவ்வொரு லயன்ஸ் கழகங்களுக்கும் சேவை மன்றங்களுக்கும் ஒதுக்கப்பட்ட கண்ணுடிகளை வழங்குவதில் இடையூறு ஏற்பட்டுள்ளது. இக் கண்ணுடிகள் யாவும் கண்டியில் உள்ள டாக்டர் சமத் இஸ்மெயிலால் தரம் பிரிக்கப்படுகிறது.

"ஆனுல் பெரும்பகுதியானவை மருத்துவ சான்றிதழ்படி இணைக்கமுடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. விரைவில் இப்படியான இடையூறு ஏற்பட்டபோதும் இவை வழங்கப்படும்."

## கவிஞர் கதிரேசர்பிள்ளைக்கு இன்று பொன்னுடை கௌரவம்

[யாழ்ப்பாணம்]

தமிழிலக்கியத்தின் மரபுவழி நின்று புத்திலக்கியம் படைத்த கவிஞர் செ. கதிரேசர்ப்பிள்ளை அவரது சொந்த ஊரான வடஅளவையில் இன்று வியாழக்கிழமை கௌரவிக்கப்படவிருக்கிருர்.

யாழ். இந்துவிடுதியில் இம்மாதம் 19ம் திகதி நடந்த யாழ் இலக்கிய வட்டத்தின் 20ம் ஆண்டுவிழாவில் கவிஞர் செ. கதிரவேற்பிள்ளையை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் போராசிரியர் கவித்தியானந்தன் பொன்னுடை போர்த்தி கௌரவிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. ஆனுல் அத்தினம் உடல்பாதுகாப்புக் காரணமாக கவிஞர் கதிரேசர்பிள்ளை சமுகமளிக்க முடியாமற் போய்விட்து.

யாழ் இலக்கிய வட்டம் இன்றுபிற்பகல் 4 மணிக்குக் சொந்த ஊரான வடஅளவை ஸ்ரீ முத்துமாரி அம்மன்தேவஸ்தானத்தில் கௌரவிப்பு வைபவத்தை நடத்தவுள்ளது.


பல்கலைக்கழகத் துணைவேந்தர் போராசிரிர் சு. வித்தியானந்தன் கவிஞருக்குப் பொன்னுடைபோர்த்திக் கௌரவிப்பார். மயிலங்கூடலூர் பி. நடராஜன் பாராட்டுரைவழங்குவார். [க]

## இன்றைய கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை முற்போக்குஎழுத்தாளர்சங்கத்தின் யாழ் கிளை மாதாமாதம் நடாத்திவரும் நோன்மதிக் கருத்தரங்கு வரிசையில் இம்மாதக் கருத்தரங்கு இன்று யாழ் மாநகர சபை இந்துவிடுதியில் காலை 9-30 மணிக்கு நடைபெறும். கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் "சமூகம்- சமயம்- சடங்கு" எஸ்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (ஐ]

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன் ச. சத்தியமூர்த்தி (சுருவில்)

(கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜென்சி)

தாயவள் மடியில்: 25-12-1957

கோழைகள் பிடியில்: 04-05-1985

திதி: 24-04-1986

அரக்கரின் கைகளால்
அநியாயக் கொலை
யுண்ட
அப்பாவித் தமிழன் நீ
ஆனுலும் நீ மறைந்து
ஒருவருடம் ஆகிறது.
உன்னுடைய உருவமது
என்றும் எம்மோடு
இணைந்தேதான்
நிற்கும்.

அன்புடன் நினைவு கூரும்:
தந்தை, சகோதர,
சகோதரிகள்,
மைத்துனர், மருமகள்.
மற்றும் உறவினர்.

ஐயனுர் கோவிலடி,
சுருவில்,
ஊர்காவற்றுறை.
[C1959]

## பெந்தகொஸ்தே சபையின் மாநாடு

[யாழ்ப்பாணம்]

இலங்கை பெந்த கொஸ்தே சபையின் வருடாந்த கன்வென்சனும் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும் 24ந் திகதி திகதி இன்று முதல் 27ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை மேற்படி சபையின் சுண்டிக்குளி சபைசாலையில் நடைபெறும். தினமும் காலை 7 மணிக்கு வேதபாடல்களும் 9 மணிக்கு ஆராதனைகளும் பிப 3. மணிக்கு பரிசுத்த ஆவிக்காகக் காத்திருத்தலும் நடைபெறும். (ஐ)

## திருவிளக்கு பூசை

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் எழுந்தருளியிருக்கும் வேம்படி விநாயகர் கோவிலில் இன்று புதன் கிழமை சித்திராபூரணை தினத்தன்று மாலை 6 மணி ளவில் திருவிளக்குப் பூஜை நடைபெறவிருக்கிறது.

இப்பூஜையை பிரம்மஸ்ரீ பொ. குமாரசாமிக் குருக்கள் நடத்தி வைக்கவிருக்கின்ருர்


நிவாரண...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)


## நிவாரண...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து வழங்கப்பட அனுமதிக்கப்பட்ட போதிலும். மார்ச் மாதப் பங்கீடு இப்பொழுதே வழங்கப்பட்டு வருகின்றது இப்பங்கீட்டுமுறை யாழ் மாவட்டத்திலுள்ள ப. நோ. சங்கங்களினுல் நிறைவேற்றப் படுகின்றது.


BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

சனி, ஞாயிறு 88 A/L

7-30 MATHS — திரு, நல்லையா
9-30 PHYSICS — திரு. யோகானந்தா
10-30 CHEMISTRY — திரு. அன்ரன்
12-30 BOTANY — திரு, சர்வானந்தா
1-30 ZOOLOGY — திரு, தம்பிராஜா

ஆரம்பம்: 26-4-86 சனி 7-30

87 A/L 88

பொருளியல் — திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. மரியதாஸ்
அளவையியல் — திரு. S S மனோகரன்
வர்த்தகமும் நிதியும் — திரு ரட்ணம்
இந்து நாகரிகம் — திருமதி அருள்நங்கை
புவியியல் — திரு. சண்
தமிழ், அரசியல் — விரிவுரையாளர்

ஆரம்பம்: 26-4-86 சனி 9-30

[A 460]



வியாபாரப் பெருக விளம்பரம் செய்க



COMPUTER
Programming Course
BASIC LANGUAGE
13th BATCH
ஆரம்பம்: 27-4-86 10-00 மணி
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்
FOR FURTHER DETAILS CONTACT:
CANTABIA INSTITUTE
(PIONEERS IN COMPUTER EDUCATION)
21, Main Street, Jaffna.
Phone 24201
(A 458)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 24-4-86

# தேர் சாம்பர், காண்டாமணி சிதறியது
# கோவிலும், மடங்களும் சேதம்

## உத்தியோக ரீதியில் சந்நிதி சென்ற குழு தகவல்

(யாழ்ப்பாணம்)

**செல்வச்சந்நிதியில் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் கட்டுவித்ததேர் முற்றுக எரிந்து சாம்பலாகிவிட்டது. சுமார் 15 லட்சம் பெறுமதி யுள்ளதும் இரண்டரைத்தொன் நிறையுள்ளதுமான காண்டா மணி வெடித்துச்சிதறிச் சின்னுபின்னமாகிவிட்டது. பூங்காவன மண்டபம், மடப்பள்ளி, அம்மன் மண்டபம், ஆறுமுகசுவாமி மடம் பிரதான கோயில் மேற்பகுதி முற்றுகச் சேதமடைந்துவிட் டன.**

செல்வச்சந்நிதி கோவிலில் ஏற்பட்ட சேதங்களை உத்தி ரீதியாகப் பார்வையிடச் சென்ற உயர் அதிகாரிகள் குழுவும், பிரஜைகள் குழுவும் இத்தகவல்களைத் தெரிவித்த னர்.

யாழ். மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. ரூடசிங்கா, பொதுசனத்தொடர்பு அதி காரி திரு த குலசேகரம் ஆகி யோர் நேற்றுக்காலை 11-15 மணிக்கு ஹெலிக்கொப்டர் மூலம் தொண்டமனுறு சென் றடைந்தனர். யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். டஞ்சலிங் கம், யாழ். பிரஜைகள்குழு வைச்சேர்ந்த திரு ஆர். பால சுப்பிரமணியம், திரு. எஸ். விசுவலிங்கம், திருமதி எஸ் சண்முகலிங்கம், திருமதி எம். அருணசலம் ஆகியோரும் கார் மூலம் காலை 10-30 மணி யளவில் கோவில் பகுதிக்குச் சென்றிருந்தனர். வடமராட் சிப் பகுதியைச் சேர்ந்த பிர ஜைகள்குழு உறுப்பினர்க ள ன பேராசிரியர் கே. சிவத் தம்பி, திரு. முருகமூர்த்தி, திரு. குமாரசாமி, திரு செல் வேந்திரன். ராஜசேகரம், தேவராசா, மற்றும் குருக்கள் பாலேந்திரா, மற்றும் கோவில் உதவியாளர்கள் வழிபடுவோர் கள் வந்திருந்தனர்

உயர் அதிகாரிகள் குழுவி னர் பிரஜைகள் குழுவினரு டன் சென்று கோவிலில் சேத மடைந்த சகல பகுதிகளையும் எரிந்த தேரையும் வெடித்து சிதறிய மணியையும் பார்வை யிட்ட பின் அங்கு நடந்த கூட் டத்தில் நடவடிக்கைக் குழு தெரிவு செய்யப்பட்டது

இந்த நடவடிக்கைக் குழுவி னர் கோவிலில் பூசையைஆரம் பிப்பதுபற்றியும், நாளை மறு தினம் சனிக்கழமை அரசாங்க அதிபரைச் சந்திப்பதென்றும் பின்னர் 29ம் தேதி பலாலி முகாமில் இணைப்பதிகாரியைச் சந்தித்து விபரங்களைத்தெரி விப்பதென்றும் முடிவுசெய்யப் பட்டது. (க. வல்வை)

## பிரதமர் ரூமேனியா பயணம்

(கொழும்பு)

பிரதம மந்திரி திரு. ஆர், பிரேமதாசாவும், திருமதி ஹேமா பிரேமதாசாவும், மூன்றுவார கால உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற் கொண்டு நேற்று அதிகாலை விமான மூலம் ரூமேனியா, துருக்கி ஆகிய நாடுகளுக்குப் பயணமானுர்கள்

பிரதமருடன் அவரது செய லாளர் திரு கே. எஸ் ஜே. பியதாசாவும் சென்றுள்ளார்,

ஸ்ராம்போலில் நடைபெற விருக்கும் மனிதக்குடியேற்றங் களுக்கான ஐ. நா. ஆணைக் குழுவின் 9வது கூட்டத்திலும் பிரதம மந்திரி உரையாற்று வார்.

கொழும்பு திரும்பும் வழியில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரையும், திரு. பிரேம தாசா சந்தித்து பேச்சு வார்த்தை நடத்துவார். (வா)

## சிறுவனுக்கும் இளைஞனுக்கும் சூட்டுக்காயம்

[புலோலி]

வல்வெட்டித்துறை, தொண் டமனுறு பகுதிகளில் திங்க ளன்று ஹெலிகொப்டர்தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோ கம் செய்தமையினுலும் இரா ணுவமுகாமிலிருந்து மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினுலும் வல்வெட் டித்துறை ஊரிக்காட்டைச் சேர்ந்த செல்வன் என். பிரபா கரன் [வயது 12], கரவெட்டி யைச் சேர்ந்த திரு. அலன் [வயது 23] ஆகிய இருவரும் காயமடைந்து பருத்தித்துறை யில் ஆஸ்பத்திரி அனுமதிக்கப் பட்டுள்ளனர்

## "யாழ்தேவியை வவனியாவரை அனுமதிக்கவும்"

[வவனியா]

"தற்போது கொழும்பிலி ருந்து அநுராதபுரம் வரும் யாழ். தேவியை வவ னியாவரை நீடிக்கவேண்டும்" என்று வவனியாப் பிரஜைகள் குழு உபதலைவர் ஜனுப் பி. எஸ். அப்துல்லா, போக்கு வரத்து அமைச்சர் ஜனுப் எம் எச் முகமத்தைக் கேட்டுள் ளார். [வா]

## மண்டூரில் 400 பேர் கைது

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத் தொகுதியில் உள்ள மண்டூர்க்கிராமத்தைச் சுற்றிவளைத்த ஆயுதப்படை யினர் 400பேரைக் கைதுசெய் துள்ளனர் இதில்ஒருபகு யினர் மேல்விசாரணைக்காக அம்பா றையிலுள்ள கொண்டைவெட் டுவான் இராணுவமுகாமுக் குக் கொண்டு செல்லப்பட் டுள்ளனர்

நேற்றுக்காலை இத்தேடுதல் வேட்டை இடம்பெற்றது. [மா]

## படுவான்கரைப் பாதுகாப்பு அம்பாறையிலிருந்து

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத் தில் வாவிக்கு மேற்குப்புற முள்ள படுவான்கரைப் பிராந் தியத்தில் பாதுகாப்பு நட வடிக்கையை அம்பாறையிலி ருந்து செயல்படுத்தும் திட்ட மொன்று நேற்றுமுதல் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

இதுகாலவரை பிராந்தியப் பாதுகாப்பு நடவடிக்கை மட் டக்களப்பிலிருந்தே மேற் கொள்ளப்பட்டு வந்தது.

வலையிறவு, முள்ளாமுனை ஆகிய இடங்களிலுள்ள பிர தான பாலங்கள் சேதப்படுத் தப்பட்டதையடுத்து மட்டக் களப்புக்கும் மேற்படி பிராந் தியத்துக்குமான போக்குவரத் துத் தொடர்புகள் பெருமளவு துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனுல்தான் அம்பாறையி லிருந்து மேற்படி பிராந்திய பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கையாளுர் ஏற்பாடுகள் செய் யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இதன் முதல் நடவடிக்கை யாக நேற்று மட்டக்களப்பு வாவிக்கு மேற்குப்புறமுள்ள மண்டூரும் அதன் சூழவுள்ள கிராமங்களும் அம்பாறை மார்க்கத்திலிருந்து நகர்த்தப் பட்ட ஏராளமான பாதுகாப் புப்படையினரால் முற்றுகை யிடப்பட்டுப்பலத்த தேடுதல் நடத்தப்பட்டது.

இதற்காக மட்டக்களப்பி லிருந்து விமானமூலம் அதிர டிப்படையினர் அம்பாறைக்கு நேற்று அதிகாலை கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மண்டூருக்கு நகர்த்தப்பட்ட தாகத் தெரிகிறது.

இதற்காக கொழும்பிலி ருந்து விசேஷவிமானமொன்று ஏற்கனவே மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு வந்து தரித்துநின்றது. (மா)

## ஓய்வூதியத் திகதி விபரம்

(யாழ்ப்பாணம்)

தபால் கந்தோர்கள் மூல மான ஓய்வூதியக்கொடுப்பனவு பற்றியதிகதி விபரங்கள் வெளி யிடப்பட்டுள்ளன. இம்மாதம் 28ம் திகதி முதல், மே 8ந் திகதி வரை இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

விபரம்வருமாறு: இம்மாதம் 28ம் திகதி வட்டுக்கோட்டை. வசாவிளான், உரும்பராய், மானிப்பாய் ஆகிய பகுதிகளுக் கான ஓய்வூதியம்.

29-4-86: யாழ்ப்பாணம், கைதடி கொடிகாமம்.

30-4-86: தெல்லிப்பழை. கோப்பாய், பண்டத்தரிப்பு, வண்ணார்பண்ணை.

மே 2-5-86: சுன்னுகம், நெடுந்தீவு, அனலைதீவு. நயினு தீவு.

5-8 86: பருத்தித்துறை, கொக்குவில், காங்கேசன்துறை

6-5-86; ஊர்காவற்றுறை, அச்சுவேலி, புங்குடுதீவு, சுளி புரம்.

7-5-86; அளவெட்டி. காரை நகர், சாவகச்சேரி, வேலணை.

8-5-86: கரவெட்டி, யாழ்ப் பாணம், வல்வெட்டித்துறை, சங்கானை.

இந்த ஓய்வூதியக் கொடுப் பனவுகள் யாவும் வழமை போன்று யாழ்ப்பாணம் விளை யாட்டரங்கில் கொடுக்கப்படும் என்று யாழ் பிரதம தபாலகம் அறிவித்துள்ளது. (கி)

## 'தஹா'வை ஐ. தே. க. செயற்குழு விசாரிக்கும்

(கொழும்பு)

கூட்டுறவுத்துறை அமைச் சர் கலாநிதி தஹநாயக்கா எதிர்வரும் 28ம் திகதியன்று ஐ தே. கட்சியின் செயற்குழு முன்னிலையில் விசாரணைக்குட் படுத்தப்படுவார் என்று நம் பத்தகுந்த வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

மேற்படி செயற்குழு வழமை யான ஒழுங்கு நடவடிக்கை களை ஆராயும் செயற்குழுவாக இருக்குமா அல்லது விசேஷ ஒழுங்கு நடவடிக்கைகளை ஆராயும் செயற்குழுவாக இருக்குமா என்பது குறித்து அன்றைய தினமே தீர்மானிக் கப்படவுள்ளது

அக்மீமனத்தொகுதி இடைத் தேர்தலின்போது ஐ தே. கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து நடந்த கூட்டங் களில், கலாநிதி தஹநாயக்கா பேசத்தவறியது தொடர்பா கக் கட்சி வட்டாரங்களில் பலத்த கண்டனம், இவருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே. (பி)

## காயமுற்ற வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் கடந்த சம்பவத்தின்போது காயமடை ந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 65 வய தான சிவம் என்பவர் நேற்று முன்தினம் மரணமானுர்.

யாழ். மரணவிசாரணை அதி காரி க கேசவன் மரணவிசா ரணை நடத்தினுர்.

மரணவிசாரணையின் போது சாட்சிகளோ உறவினர்களோ சமூகமளிக்காததினுல் விசா ரணை பின்போடப்பட்டுள்ளது.

இவர் மந்திகை ஆஸ்பத்திரி யிலிருந்து, யாழ் ஆஸ்பத்திரி க்கு மாற்றப்பட்டிருந்தார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## மரண அறிவித்தல்

### திரு. சிவசம்பு ஏகாம்பரம் – இருபாலை

இவர் சிவசம்பு (காலஞ்சென்ற) தில்லைப்பிள்ளை தம்பதிகளின் மகனும் இராஜலட்மியின் அன்புக் கண வரும், சிவகுமார் [கனடா], மனோகரன் (ஜேர்மனி), திருமதி மகேஸ்வரன் குலராணியின் தந்தையும், திரு. சோ. மகேஸ்வரனின் மாமனுரும் ஆவார். அன்னுரின் பூதவுடல் இன்று பி ப. 2 மணியளவில் இறுதிக்கிரியை களுக்காக இருபாலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர் கள் ஏற்றுக்கொள்ளவும்.

சிறை மீட்டான்வளவு,
கோப்பாய் தெற்கு.

தகவல்:
மகேஸ்வரன் குலராணி

C 1969

### திரு. கந்தையா இராசரெட்ணம்
[மாவை மெற்றல் உரிமையாளர்]



மாவிட்டபுரம் திரு. திருமதி கந்தையாவின் சிரேஷ்ட புதல்வன் கந்தையா இராசரெட் ணம் மேற்கு ஜேர்மனி யில் காலமானுர். இவர் லோகேஸ்வரியின் [போனிக்கா] அன்புக்கணவரும், பிரதீபா, பிரதீபன் ஆகி யோரின் அன்புத் தந்தை யும், மாவிட்டபுரம் காலம் ஞ்சென்ற திரு கந்தையா திருமதி அன்னலட்சுமி கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனுமாவார்.

அன்னுரின் ஈமக்கிரியைகள் 24-4-1986 (இன்று) வியா ழக்கிழமை மேற்கு ஜேர்மனியில் நடைபெறும. அன்று எமது மாவிட்டபுரம் இல்லத்திலும் துக்கம் அனுஷ் டிக்கப்படும். உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் இவ்வறிவித்தலை ஏற்று அன்னுரின் ஆத்ம சாந் திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின் ருேம்.

Mrs L. RAJARETNAM,
No: 15, Zechenring-18,
4690, Herne-1,
West Germany. [C 1962]

தகவல்: திருமதி
க. அன்னலட்சுமி,
கோவில் தெற்குவீதி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.